# டாக்கா 'விமானக்கடத்தல் நாடகம்' நீடிக்கிறது

பக்கங்கள் 6 விலை சதம் 40 ★

ஈழநாடு

The EELA NADU

மலர்: 19 புரட்டாசி 14 ஷவ்வா 16 இதழ் 230

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 30-9-77

## திசை திருப்பியவர்களின் நிபந்தனையை ஜப்பான் அரசாங்கம் ஏற்றுக் கொண்டது!

டாக்கா, செப். 29

பம்பாயிலிருந்து பாங்ஹொக் நோக்கிப் புறப்பட்ட 'டி ஸி-8' விமானம், ஜப்பான் கடத்தல்காரர்களினால் திசைதிருப்பப்பட்டு பங்களாதேஷ் தலைநகரான டாக்காவில் இறக்கப்பட்டதைத்தொடர்ந்து ஏற்பட்ட 'திகில்' தொடர்ந்து நீடிக்கின்றது! விமானத்திலுள்ள ஒவ்வொரு பிரயாணியும், விமானச் சிப்பந்திகளும் அடுத்து என்ன நடக்குமோ என்று அஞ்சிக்கொண்டிருக்கின்றனர்!

விமானத்தைக் கடத்தியவர்கள் தங்களின் சகாக்கள் 9 பேரையும் விடுதலை செய்யுமாறு கோரியுள்ளனர். ஆனால் கடத்தல்காரர்கள் விதித்த காலக்கெடுவுக்கு முன்னர் (இலங்கை நேரப்படி நள்ளிரவு பன்னிரண்டு மணி) ஜப்பானில் சிறைவைக்கப்பட்ட 9 பேரையும் மற்றும் 60 லட்சம் டாலர் பணத்தையும் டாக்கா கொண்டுவர முடியாதென்றும் வெள்ளிக்கிழமை அதிகாலைதான் பணத்தையும் சிறைவைக்கப்பட்ட "9 செஞ்சேனை படைவீரர்களை"யும் டாக்கா கொண்டுவர முடியுமென்றும் பங்களாதேஷ் விமானப் படைத்தளபதி ஜனாப் அப்துல் கபூர் மஹ்மூத் அறிவித்துள்ளார்.

அந்த நேரத்தில், மேற்கொண்டு எவரையும் விடுவிக்க முடியாதென்றும் தங்களின் சிறைக்கைதிகளை விடுவித்து, பணமும் கிடைத்தால்தான் மேற்கொண்டு நடவடிக்கைகளில் இறங்கமுடியும் என்றும் கடத்தல் வீரர்கள் அறிவித்துள்ளனர்.

இச் செய்தி அச்சுக்குப் போகும்வரை. இவ் விஷயத்தில் ஒரு தீர்மானக்கமுடிவு ஏற்படவில்லை.

### கடைசிச் செய்தி

பம்பாயில் ஆரம்பித்து டாக்காவில் தொடரும் 'விமானக் கடத்தல் நாடகம்' இரண்டு நாட்களாக நீடித்த போதிலும், விமானக் கடத்தல்காரர்களின் கோரிக்கையை அவர்களின் காலக்கெடுவுக்கு முன்னர் நிறைவேற்ற ஜப்பானிய அரசாங்கத்தினால்முடியவில்லை.

விமானத்தை வெடி வைத்து தகர்க்க கடத்தற்காரர்கள் தயாராக உள்ளனர் ஆனால், இச் செய்தி அச்சுக்குப் போகும்வரை (இலங்கை நேரப்படி இன்று நள்ளிரவுவரை) விமானத்துக்கோ அல்லது அகதிகளுக்கோ எந்தவித தீங்கும் ஏற்படவில்லை கடத்தல்காரர்கள் தங்களின் கோரிக்கை நிறைவேறுவதை ஜப்பானிய அரசிடமிருந்து எதிர்பார்த்து நிற்கின்றனர்.

பம்பாயில் வைத்துக் கடத்தப்பட்டு தற்போது டாக்கா விமானநிலயத்தில் இருக்கும்

(6 ப் பக்கம் பார்க்க)

★ மானிப்பாய் வங்கிக் கொள்ளை

# பிணையில் சந்தேக நபர்கள் விடுதலை!

## அச்சுவேலிக் கொள்ளை: சந்தேக நபர்கள் தொடர்ந்து ரிமாண்ட்!

யாழ்ப்பாணம், வெள்ளி

மானிப்பாய் வங்கிக் கொள்ளை தொடர்பாக நேற்று யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் நடந்த அடையாள அணிவகுப்பில், சந்தேக நபர் எவரும் அடையாளம் காட்டப்படவில்லை.

யாழ்ப்பாணம் பதில் நீதவான் திரு எஸ். கைலகரத்தினம் முன்னிலையில் அடையாள அணிவகுப்பு நடைபெற்றது.

சந்தேக நபர்களான அம்பிகாபதி, சந்திரமோகன் ஆகியோர் மூடி மறைக்கப்பட்டு நீதி மன்றத்திற்கு கொண்டு வரப்பட்டனர்.

இவர்களை அடையாளம் காட்டவந்த 5 வங்கி ஊழியர்களும் கார்ச்சாரதியும், சந்தேக நபர் எவரையும் அடையாளம் காட்டவில்லை.

யாழ்ப்பாணம் நீதவான் திரு.கே.வி. நவரத்தினம் முன்னிலையில் சந்தேக நபர்கள் நேற்றுப்பிற்பகல் ஆஜர் செய்யப்பட்டனர்.

நீதவான் சந்தேக நபர்களை தலா 1000 ரூபா சரீர பிணையில் செல்ல அனுமதித்தார்.

1ம் சந்தேக நபர் சார்பில் சட்டத்தரணி ஜிம்மி ராசரத்தினமும் 2ம் சந்தேக நபர்கள் சார்பில் சட்டத்தரணி ஆர். விஸ்வநாதனும் ஆஜரானார்கள்.

### அச்சுவேலி வங்கிக் கொள்ளை

அச்சுவேலி ப.நோ.கூ.சங்க கொள்ளை தொடர்பான சந்தேக நபர்கள், நேற்று நீதிமன்றத்திற்கு கொண்டுவரப்படவில்லை. அவர்கள் தொடர்ந்து ரிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர். (க)

கந்தரோடையில் சம்பவம்:

## துப்பாக்கி முனையில் கார் கடத்தல்!

யாழ்ப்பாணம், வெள்ளி

கந்தரோடையில் நேற்று [illegible] முனையில் கடத்தப்பட்ட கார் [illegible]டியின் அருகிலான [illegible] நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது.

கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கு அருகாமையில் உள்ள குளத்தடியில்மறைந்திருந்த கொள்ளைக்கோஷ்டியினர், சுன்னாகத்திலிருந்து சண்டிலிப்பாய் நோக்கிச் சென்றுகொண்டிருந்த காரை மறித்து அதிலிருந்த இளம் குடும்பத்தினரையும் சாரதியையும் துப்பாக்கி முனையில் இறக்கிவிட்டு காரைக் கடத்திச் சென்றனராம்.

[illegible] பொலிஸ் [illegible] பாடு செய்ததைத் தொடர்ந்து இக்கார் அளவெட்டியில்கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

காருக்கு பெற்றோல் குறைவாக இருந்ததினாலேயே கார் சிறிது தூரத்தில் நிறுத்தப்பட்டிருக்கலாம் என்று கூறப்பட்டது. இச்சம்பவம் தொடர்பாக சுன்னாகம் பொலிசார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (கெ)

### யாழ்.ஆஸ்பத்திரியில் நாளை புற்றுநோய் சிகிச்சை

யாழ்ப்பாணம், வெள்ளி

மகரகம புற்றுநோயாளர் சிகிச்சைப் பிரிவைச் சேர்ந்த வைத்திய நிபுணர் கலாநிதி ஆர்.ராஜாகுக் நாளை சனிக்கிழமை யாழ். பெரியாஸ்பத்திரியில் வடபகுதியில் உள்ள புற்றுநோயாளர்களுக்கு சிகிச்சை அளிப்பார்.

மாதத்தில் இரு தடவைகள் கலாநிதி குக் யாழ்.ஆஸ்பத்திரியில் புற்றுநோயாளர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன (இ)

# "கலைஞர் கருணாநிதி பழிவாங்கப்படுகின்றாரா?"

## ஜனதா முன்னாள் செயலாளர் கண்டனம்

சென்னை, செப். 29

"கலைஞர் கருணாநிதி நெருக்கடி நிலைப் பிரகடனத்தை எதிர்த்தார் என்பதற்காக அவரை வஞ்சம் தீர்க்க இந்திரா காந்தியால் அமைக்கப்பட்டதே சார்க்காரியா கமிஷன்" என்று நாடாளுமன்றத் தேர்தலுக்குமுன் ஜனதா கட்சித் தலைவர்கள் கூறினார்கள். ஆனால் இன்றளவும் சார்க்காரியா கமிஷனும், கிரிமினல் வழக்கும் தொடருகின்றன. இதற்குக் காரணம் என்ன?" என்று ஜனதா கட்சியின் முன்னாள் செயலாளரும் பிரபல பத்திரிகை நூலாசிரியருமான திரு. ராஜிந்தர் பூரி, பிரபல ஆங்கில வார ஏடான 'பிளிட்ஸ்' பத்திரிகையில் வெளியிட்டுள்ள கட்டுரையில் கேள்வியெழுப்பியுள்ளார்.

அக்கட்டுரையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

"நெருக்கடி நிலை பிரகடனப்பட்டபோது முதலமைச்சராகவிருந்த கலைஞர் கருணாநிதியும் தி.மு. கழகத்தினரும் முழுமூச்சாக எதிர்த்தனர். நெருக்கடி நிலைமை பிரகடனம் செய்யப்பட்ட 15 தினங்களில் 15 லட்சம் மக்கள் கொண்ட பேரணியை நடாத்தி கலைஞரே அதில் உரையாற்றினார். அதில் காந்தியடிகளின் அறவழியில் ஜனநாயகத்தைக் காப்போமென்று குரல் எழுப்பினார்.

"தலைமறைவாக வந்து தங்கி, நெருக்கடி நிலையை எதிர்ப்போருக்கு தமிழகம் விருந்தோம்பும் சரணாலயமாக மாறியது. இப்போது மத்திய அரசில் ஜனதா அமைச்சர்களாக இருக்கின்ற [illegible]லர், நெருக்கடி நிலையின் போது தலைமறைவாக இடம்விட்டு இடம் பெயர்ந்தவர்களை கருணாநிதி உபசரித்து புகலிடமும் பாதுகாப்பும் வழங்கினார். தி.மு.கழக அமைச்சரவையை திருமதி இந்திரா காந்தி பதவிநீக்கம் செய்தது பற்றி வியப்படைய வேண்டியதில்லை. ஊழல் புகார் விசாரணை என்றபெயரில் இந்திரா காந்தி சார்க்காரியா கமிஷனை நியமித்தார்.

'சர்க்காரியா கமிஷனில் விந்தையான பல அம்சங்கள் இருக்கின்றன. கருணாநிதிக்கெதிராக யார் புகார் மனுகொடுத்தார்களோ அவர்களோடு [illegible] விசாரணைசெய்ய அனுமதி வழங்கப்படவில்லை சர்க்காரியா கமிஷன் இன்னொரு விசித்திரமான விஷயத்தையும் கண்டுபிடித்துள்ளது. முழு விசாரணையையும் மாநில காவல்துறை அதிகாரிகளிடமும் சி.பி.ஐ அதிகாரிகளிடமும் ஒப்படைக்கப்பட்டன. சாட்சியங்களிடமிருந்து தங்கள் விருப்பம் போல் சாட்சியங்களைப் பெற

(6-ம் பக்கம் பார்க்க)

# பலாலி விமான நிலையத்தில் விமானப் படைத்தளம்

## அடுத்த வாரம் அமைக்கப்படும்

கொழும்பு, வியா.,

பலாலி விமான நிலையத்தில் அடுத்த வாரம் இலங்கை விமானப்படை விமானத்தளம் ஒன்று அமைக்கப்பட உள்ளது.

பாக்குநீரிணைப் பகுதியில் கள்ளக் கடத்தல், கள்ளக்குடியேற்றம் ஆகியவற்றைத் தடை செய்யும் நோக்குடனேயே இவ்விமானத்தளம் பலாலியில் அமைக்கப்பட உள்ளதாகவும் இத்தளத்தில் நான்கு விமானங்கள் நிறுத்தப்பட்டிருக்கும் எனறும் இவ்விமானங்கள் கடலுக்குமேல் ரோந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதே வேளையில் அவசியமேற்படின விமானப்படை நிலப்பரப்பிலும் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடுமென்றும் விமானப்படைத் தளபதி ஹரி குணதிலகா தெரிவித்தார்.

இதுகாலவரை பாக்குநீரிணைப் பகுதியில் ரோந்து நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குக் கொழும்பிலிருந்தே விமானங்கள் வந்துபோக வேண்டியிருந்ததால் அதிக செலவு ஏற்பட்டதாகவும், இதை தவிர்க்கும்பொருட்டே பலாலியில் விமானத் தளம் அமைக்கப்பட உள்ளதாகவும் திரு. குணதிலகா தெரிவித்தார்.

# வரி விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையில் முக்கியமான உதிரிப் பாகங்களுடன் CN ஏழாயிரம் இலக்கத் தொடரில் ஸ்கோடா (SCODA) கார் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க. தொலைபேசி இலக்கம் 7445; (யாழ்ப்பாணம்) 7237

இலங்கை வங்கி கனிஷ்ட இலிகிதர்/உதவிக் காசாளர் பதவிகளுக்கான விண்ணப்பப் படிவம் தமிழிலும் ஆங்கிலத்திலும் சனித்கனி 50 சதம். விபர இதழ் 15 சதம். தபாலில் பெறுவதற்குத் தேவையான படிவங்களின் பெறுமதிக்கு முத்திரைகளும், 15 சத முத்திரை ஒட்டிய என்வலப்பும் அனுப்புக ஆனந்தா புத்தகசாலை, 226, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 7244

### தேவை

வேப்பம் விதை, இலுப்பம் பருப்பு தொகையாகத் தேவை. தொடர்பு கொள்ளுங்கள். மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம், யாழ்ப்பாணம். 7241

### தேவை

சோடா விற்பனை வாகனத்திற்கு சோடா பெட்டி ஏற்றி இறக்கி விற்பனை செய்ய அனுபவமுள்ள ஓட்டுநர் தேவை. நேரில் வரவும். "பிள்ளையார் ஸ்ரோர்ஸ்", இல: 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 7233

ஆண் மழுப்புவோரும் (Fusers) வேலை பழகுபவர்களும் (Carriers) உடனடியாக தேவை. நேரில் வரவும் யாழ். பெனின்சலா கண்ணாடித் தொழிற்சாலை, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 7231

## அன்பளிப்பு

கொழும்பு, வியா. ஜெர்மன்சமஷ்டிக் குடியரசு 9600 தொன் யூரியா உரத்தை இலங்கைக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

இதுதொடர்பான கையளிப்புவைபவம் கொழும்பில் இன்று நடைபெற்றது. விவசாய காணி அமைச்சர் திரு. ஈ. எல் சேனநாயகாவும் இக்கையளிப்புவைபவத்தில்கலந்துகொண்டார். (உ)

யாழ். மாநகரசபை

## 1978-ம் ஆண்டு - வாகன இலக்கத் தகட்டுக்கான கேள்விகள்

1978-ம் ஆண்டுக்குத் தேவையான, கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வாகன இலக்கத் தகட்டுக்கான கேள்விகள் எதிர்வரும் 14-10-77-ந் திகதி காலை 9-00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விகள் யாவும் அரக்குமுத்திரையிடப்பட்டு க. பொ 20/77 என்னும் இலக்கமிட்டு ஆணையாளர், மாநகரசபை என்னும் விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். ஒத்தி பெறும் கேள்விக்காரர் குறிப்பிடப்பட்டுள்ள தகடுகளை எதிர்வரும் 31-12-77-ந் திகதிக்குப் பிந்தாமல் விநியோகிக்க [illegible] ஒப்பந்தம் செய்தல் வேண்டும்.

14-10-77-ந் திகதி காலை 9-00 மணிக்குப் பின்னர் கிடைக்கும் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. மாதிரித் தகடுகள் இணைக்கப்படல் வேண்டும்.

விபரம்

தகடுகள் யாவும் 'எனமல்' தகட்டில் கறுத்த இலக்கத்துடன் மஞ்சள் நிற மை பூசப்பட்டிருக்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| 8000 | தகடுகள் | யா. து. வ. |
| 100 | ,, | யா. வா. து. வ. |
| 25 | ,, | யா. கை. வ. |
| 25 | ,, | யா. ஒ. வ. |
| 25 | ,, | யா. இ. வ. |
| 75 | ,, | நாய் தகடுகள் |

க. சிவஞானம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
27-9-77. 7236

### சங்க அங்குரார்ப்பணம் செய்யும் பொதுக்கூட்டம்

பாலர் பாடசாலை ஆசிரியைகள் எதிர்நோக்கும் கஷ்டங்களை அரசுக்கு எடுத்துக்கூறவும் 'பாலர்களரி' பயிற்சிபெற்ற ஆசிரியைகள் அனைவரையும் 9-10-77 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு 133, மானிப்பாய் வீதியிலுள்ள சிறுவர் பாடசாலை மண்டபத்திற்கு வருமாறு அழைக்கின்றோம்.

திருமதி ச. இராசா,
அமைப்பாளர்.

யாழ்ப்பாணம். 7246

### அறிவித்தல்

வடஈழ நெசவாளர் சங்கத்தின் மூலம் சங்கத்திற்கு நூல் இறக்குமதி செய்தல்

மேற்படி சங்கத்தின் சிறப்புக்கூட்டம் வருகிற சனிக்கிழமை (1-10-77) யாழ். நவீன சந்தை மேல்மாடியில் 19-ம் இலக்கக் கடையில் நடைபெறும்.

அன்று பல முக்கிய விடயங்கள் பற்றி ஆராயவிருப்பதால் அங்கத்தவர்கள் யாபேரும் தவறாது சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

க. செல்வநாதன்,
செயலாளர்.

29-9-77 7245

### தேவை.

அரிசிமில் இயந்திரங்கள் (Hullers) பழுதுபார்க்கக்கூடிய ஒருவர் தேவை. அத்துடன் பிரிக்கும் இயந்திரம் (Seperater) ஜப்பான் கல்லர் (Japan Huller) ஆகியனவும் திருத்தக்கூடியவராக இருத்தல் அவசியம்.

தொடர்புகொள்க.

முகாமையாளர் அரிசிப்பகுதி.
சி. எஸ். கே. மில்ஸ்,
11, கே. கே. எஸ் வீதி — யாழ்ப்பாணம். 7203

1973ம் ஆண்டின் 44-ம் இலக்க நீதி நிருவாகச் சட்டம் 283-ம் பிரிவின் கீழ்

### இடைக்கால கட்டளை

### இலங்கைக் குடியரசின் பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளர் முன்னிலையில்

கடற்கரை வீதி பருத்தித்துறையைச் சேர்ந்த S.C இராஜசிங்கத்தின் மரண சாதனமில்லாத சொத்துக்கள் சம்பத்துகள் சம்பந்தமாக

காலஞ்சென்றவர்

றெபேக்கா அருள்மலர் இராஜசிங்கம், கடற்கரைவீதி, பருத்தித்துறை.

விண்ணப்பதாரர்

இல: 378
வலயம்: யாழ்ப்பாணம்

1. றெஜினோல்ட் தேவநேசன் இராஜசிங்கம்.
2. கிறேஸ் இராஜினி இராஜசிங்கம் கடற்கரை வீதி, பருத்தித்துறை.
3. பராயமற்ற 1-ம், 2-ம் பிரதிவாதிகளின் பாதுகாவலராக கந்தையா டேவிட் அருட்பிரகாசம், 27/3 பீட்டசன் லேன், வெள்ளவத்தை

பிரதிவாதிகள்

281-ம் பிரிவின் கீழ் தாக்கல் செய்யப்பட்டதும் 1977-ம் ஆண்டு ஆனி மாதம் 18-ந் திகதியிடப்பட்டதுமான விண்ணப்பத்திலிருக்கும் கூற்றுக்கள் பார்த்த மாத்திரத்தில் நிருபிக்கப்பட்டுள்ளது என்த் திருப்தியடைந்ததன் பேரில் 1977-ம் ஆண்டு ஆவணி மாதம் 18-ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் எவராவது எதிர்க்காரணம் காட்டினாலன்றி மேற்சொல்லப்பட்ட மனுதாரர் காலஞ்சென்றவரின் மனைவி என்றவகையில் [illegible] எழுதப்படாத சொத்துக்குரிய உரிமைச்சத்துவப் பத்திரங்களைப் பெறுவதற்கு உரித்துடையவர் என்றும் அவ்வண்ணமே அவருக்கு வழங்கப்படுமென்றும் மேற்சொல்லப்பட்ட பராயமடையாத 1-ம், 2-ம் பிரதிவாதிகளின்பாதுகாவலராக3-ம் பிரதிவாதி நியமிக்கப்படுவாரென்றும் யாழ்ப்பாணம் நீதிநிருவாக வலையத்தின் தத்துவப் பத்திர அதிகாரி கா. கணபதிப்பிள்ளையாகிய நான் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் செயற்பட்டு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

கா. கணபதிப்பிள்ளை,
தத்துவப்பத்திர அதிகாரி,
1977-ம் ஆண்டு ஆவி மாதம் 18-ந் திகதி.

வரைவு
பெ. செ. பாலசிங்கம்,
சட்டத்தரணி.

காரணம் காட்டுவதற்கு காலம் 1977-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 21-ந் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

கா கணபதிப்பிள்ளை,
தத்துவப் பத்திர அதிகாரி.
7239

## ஊழல் பற்றி விசாரணை

யாழ்ப்பாணம், வெள்ளி

தென்மராட்சி கிழக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் கடந்த காலத்தில் நடந்த ஊழல்கள் பற்றி விசாரணை நடைபெற்றுவருகிறது.

தலைமைக்காரியாலய கூட்டுறவுப் பரிசோதகர் திரு. எஸ். கிறிஸ்தோஸ்தம் இந்த விசாரணையை நடத்திவருகிறார்.

கடந்தகால ஊழல்பற்றியும் ஊழியர் நியமனங்கள் பற்றிய சீர்கேடுபற்றியும், புகார்செய்ய விரும்புவோர் எழுத்துமூலம் தொடர்புகொண்டு சாட்சியமளிக்கலாம் என்று கூட்டுறவு உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார். (க)

# கல்முனையில் மீன்பிடித்துறைமுகம்?

கல்முனை, வியாழன்

கல்முனையில் முதலாவது மீன்பிடித்துறைமுகம் நிறுவப்படக்கூடும்.

கல்முனை தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் ஜனாப் ஏ. ஆர். மன்சூர் அரசாங்கத்திற்குத் தெரிவித்துள்ள யோசனை அமுல் செய்யப்பட்டால் கிழக்குக் கரையோரப் பகுதியில் கல்முனையில் முதலாவது மீன்பிடித்துறைமுகம் ஐ. தே. க அரசாங்கத்தினால் அமைக்கப்படும்.

கல்முனையில் இத்திட்டத்தை அமைப்பது சம்பந்தமான முடிவு விரைவில் எடுக்கப்படும் என்று ஜனாப் மன்சூர் தெரிவித்தார். (உ)

கொஸ்கம பஸ் விபத்து:

# பொலிஸ் சுப்பிரிண்டன்ட் தலைமையில் விசாரணைக்குழு

கொழும்பு, வியாழன்

கொழும்பு போக்குவரத்துப் பொலிஸ் சுப்பிரின்டன் திரு லியோ பெரேரா தலைமையில் கொஸ்கம இ. போ. ச. பஸ் விபத்துக் குறித்து விசாரணை நடத்தக் குழு நியமிக்கப்படும்.

இத்தகவலை இ. போ. ச. தலைவர் திரு. இர்வின் ஜெயசூரியா வெளியிட்டார்.

திரு. எம். எம். சாலி மற்றும் இரு இ. போ. ச. அதிகாரிகள் ஆகியோரும் இக்குழுவில் இடம்பெறுவர்.

இதேவேளை இ. போ. ச. ஊழியர் எவரும் வேலைநேரத்தில் மதுவருந்தியிருந்தால் உடன் தற்காலிக வேலைநீக்கம் செய்யப்படுவார்கள் என்றும் இ. போ. ச. தலைவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கொஸ்கம பஸ் விபத்தில் 7 பேர் மரணமாகினர் என்பது தெரிந்ததே. (உ)

இந்திய வம்சாவளியினருக்கு

# மனிதாபிமான முறையில் உதவக் கோரிக்கை

கொழும்பு, வியாழன்

இலங்கைப் பிரஜாஉரிமை பெற விரும்பியவர்களுக்கு இந்திய பிரஜாஉரிமை கிடைப்பதற்கு மனிதாபிமான முறையில் உதவுமாறு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு.எஸ் தொண்டமான் பிரதமர் திரு ஜே ஆர்.ஜெயவர்த்தனாவிடம் கோரவிருக்கிறார்.

இவ்விஷயம் தொடர்பாக திரு தொண்டமான், பிரதமரை விரைவில் சந்திக்கவிருக்கிறார்.

சிறிமா–சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ், இலங்கைப் பிரஜாஉரிமைக்கு விண்ணப்பித்தவர்களில் பலர் இந்திய வம்சாவழியினர், அதைக் கைவிட்டு இந்தியப் பிரஜாஉரிமை,பெறவிரும்புகிறார்கள். இவர்களுக்கு மனிதாபிமான முறையில் உதவுமாறு,பிரதமரிடம் திரு. தொண்டமான் கோருவார்.

இவ்விஷயம் தொடர்பாக இந்தியப் பிரதமர், திரு. மொரார்ஜி தேசாய் தமிழ்நாட்டு முதலமைச்சர் திரு. எம் ஜி. இராமச்சந்திரன் ஆகியோரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்கு,திரு. தொண்டமான், அடுத்தமாதம், இந்தியா செல்லவிருக்கிறார். (க)

# தீவுப்பகுதியில் நன்னீர் ஆராய்ச்சி வேண்டும்

## பண்டிதர் பேரவையில் கேட்பார்

யாழ்ப்பாணம், வெள்ளி

"தீவுப்பகுதியை எதிர்நோக்கும் குடிநீர்ப் பிரச்னைகளை தீர்த்துவைப்பதற்கு அரசு, நெடுந்தீவு, புங்குடுதீவு, வேலணை, அனலைதீவு, நயினாதீவு, எழுவைதீவு, மண்டைதீவு ஆகிய இடங்களில் நிலத்தின்கீழ் தண்ணீர் உண்டா என்பதை அறிவதற்கு அவ்வவ் விடங்களில் அகழ்வாராய்ச்சியை உடன் ஆரம்பிக்கவேண்டும்."

இவ்வாறு ஊர்காவற்றுறை தேசிய அரசுப்பேரவை உறுப்பினர் பண்டிதர் கா.பொ. இரத்தினம் தேசிய அரசுப் பேரவையில் கோரிக்கை விடுப்பார்.

தீவுப்பகுதியில், காலநிலை சரியாகவுள்ள காலங்களைத் தவிர மற்றைய காலங்களில், தொகுதிமக்கள் குடிநீர்க்கஷ்டத்தால் மிகவும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். எனவே நீர்ப்பாசன மின்சக்தி நெடுஞ்சாலைகள் அமைச்சு இப்பகுதி மக்களின் குடிநீர்க்கஷ்டத்தைப் போக்க உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பண்டிதர் தமது கோரிக்கையின் போது வலியுறுத்துவார். (கெ-இ)

## ரூ. 10,000 கொள்ளை

கொழும்பு, வியாழன்

துப்பாக்கிகள், வாள்கள் முதலியன சகிதம் கடையொன்றிற்குள் புகுந்த ஐவர் கொண்ட இளைஞர் கோஷ்டி. காசாளரை மிரட்டி 10,000 ரூபாவைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளது.

இச்சம்பவம் கொட்டாஞ்சேனைப் பொலிஸ் பகுதியில் நிகழ்ந்தது. (உ)

## றப்பர்த் தோட்டத்தில் வாலிபர் சடலம்

கொழும்பு, வியாழன்

தமது நண்பர் ஒருவருடன் காணப்பட்ட நபர் ஒருவர் மறுநாள் றப்பர்த் தோட்டம் ஒன்றின் அருகில் கத்திக் குத்துக் காயங்களுடன் இறந்து கிடக்கக் காணப்பட்டார்.

இச்சம்பவம் ஹோமகமையில் நடைபெற்றுள்ளது.

பத்திரகே என்ற இந்நபரின் படுகொலை தொடர்பாக ஹோமகம பொலிஸார் காலஞ்சென்றவரின் நண்பரான அமரசிறி என்பவரைத் தேடிவருகின்றனர். (உ)

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

### கடத்தப்பட்ட ஜாப். விமானம்:

# பயங்கரவாதிகளின்கையில் 160 பிரயாணிகளின்

# உயிர் ஊசலாடுகிறது!

## பெண்கள், சிறுவர்களை விடுவிக்கவும் மறுப்பு

லண்டன், செப். 29

ஜப்பானிய விமானக் கடத்தல் தொடர்பாக தூதுகோஷ்டி ஒன்றை டாக்காவுக்கு அனுப்பி வைக்குமாறு பங்களாதேஷ் விடுத்த வேண்டுகோளை ஏற்க ஜப்பானிய அரசு மறுத்துள்ளது.

இவ்விதம் தூதுகோஷ்டி ஒன்றைத் தாம் கடத்தல்காரர்களிடம் அனுப்புவது அவர்களுக்கு ஒருவேளை ஆத்திரப்படுத்தக்கூடும் என்று ஜப்பானிய அரசு அச்சம் தெரிவித்துள்ளது.

விமானத்தில் பணயம் வைக்கப்பட்டுள்ளவர்களில் சிறுபிள்ளைகளையும், பெண்களையும் நிபந்தனையின்றி விடுதலைசெய்யுமாறு ஜப்பானிய அரசு விடுத்த வேண்டுகோளை கடத்தல்காரர்கள் நிராகரித்துவிட்டனர்.

இவ்விடயத்தில் மேற்கொண்டு என்ன செய்வது என்பது பற்றி ஜப்பானிய, பங்களாதேஷ் அரசுகள் எடுத்துள்ள முடிவு எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

142 பிரயாணிகளையும் 18 விமானச் சிப்பந்திகளையும் சுமந்துகொண்டு பம்பாயில் இருந்து பாங்கொக் புறப்பட்ட ஜப்பானுக்குச் சொந்தமான இந்த விமானத்தை ஜப்பானிய புரட்சி இயக்கமொன்றின் செஞ்சேனையைச் சேர்ந்த இருவர் விமானம் புறப்பட்ட சில நிமிடங்களிலேயே பம்பாயில் வைத்து திசைதிருப்பி டாக்காவில் இறக்கினர்என்பது தெரிந்ததே.

ஜப்பானில் சிறைவைக்கப்பட்ட ஒன்பது செஞ்சேனை வீரர்களையும் உடனடியாக விடுதலைசெய்யாவிட்டால் விமானத்தை வெடிவைத்துத் தகர்த்து 160 பேரையும் கொலைசெய்யப்போவதாக பயமுறுத்தியுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ)

## ரஷ்யாவுக்கு எதிராக மாஓ செயல்பட்டாராம்

மாஸ்கோ, செப். 29

சோவியத் யூனியனுக்கு எதிரான கருத்துக்களைப் பரப்புவதில் காலஞ்சென்ற சீனத் தலைவர் மாசேதுங் ஈடுபட்டிருந்தார் என்று சோவியத் யூனியனில் வெளியிடப்பட்டுள்ள நூல் ஒன்றில் கூறப்பட்டிருக்கிறது.

சோவியத் யூனியனுக்கு எதிரான கருத்துக்களைத் தூண்டுவனவாக மாசேதுங்கின் செயல்கள் அமைந்தன என்று இந்நூலில் கூறப்பட்டுள்ளது என்று டாஸ் செய்தி ஸ்தாபனம் அறிவித்துள்ளது. (உ)

## ஹஜ்யாத்திரை தடைப்படும்?

துருக்கி, செப். 29

இம்முறை ஹஜ் யாத்திரையை அனுமதிக்கவேண்டாமென துருக்கிய சுகாதார அமைச்சு வேண்டுகோள் விடுத்துள்ளது.

துருக்கியில் அதிகமானோர் வாந்திபேதியால் பீடிக்கப்பட்டிருப்பதே இதற்குக் காரணமாகும். இதேசமயம் இந்நோயைக் கட்டுப்படுத்துவதற்கு உலகசுகாதார நிறுவனத்திடமும் உலக நாடுகளிடமும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (உ)

## விமானத் தபால்களில் முத்திரை திருட்டு?

### தபால் சேவகர் வேலைநீக்கம்

### யாழ். தபால் கந்தோரில் சம்பவம்

யாழ்ப்பாணம், வெள்ளி

விலையுயர்ந்த தபால் முத்திரைகளைக் திருடும்நோக்குடன் பல வெளிநாட்டுத் தபால்களை தமது காற்சட்டை பையினுள் மறைத்து வைத்திருந்ததாகக் கருதப்படும் யாழ். தபால் கந்தோரில் கடமையாற்றும்தபால் சேவகர் ஒருவர் உயர்அதிகாரிகளிடம் அகப்பட்டுக்கொண்டாராம்.

இதைஅடுத்து தபால் சேவகர் ஒருவர் தற்காலிகமாக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

அஞ்சல் செய்யப்படும் தமது வெளிநாட்டுக்கடிதங்கள் உரிய விலாசதாரருக்கு போய்ச் சேருவதில்லை என பொதுமக்கள் பலர் செய்துள்ள புகார்களை அடுத்து திடீர் சோதனையை மேற்கொண்ட யாழ்ப்பதில் தபால் அதிபர் திரு. பி. கே. சுந்தரலிங்கம், கோலஉடைப் பரிசோதகர் திரு. எஸ் அருணகிரிநாதன் ஆகியோர் குறிப்பிட்ட தபால்சேவகரிடமிருந்து 17 வெளியூர் விமானத்தபால்களை கைப்பற்றினராம்.

இதுசம்பந்தமாக விசாரணையை மேற்கொண்டசமயம், சந்தேகநபரிடம் காணப்பட்ட விமானத் தபால்களின் முத்திரைகள் ரத்துச்செய்யப்படாமல் இருந்ததும் கண்டுபிடிக்கப்பட்டதாம்.

இதுதொடர்பாக யாழ், மாவட்ட நுண்ணாய்வுப்பரிசோதகர் திரு.எம்.ஆறுமுகதாசன், யாழ்.மாவட்டதபால் அத்தியட்சகர் திரு.எஸ். பாலசிங்கம் ஆகியோர் நடத்திய விசாரணையின்பின்னர் குறிப்பிட்ட தபால் சேவகர் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டார் விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது. (கெ-இ)

## தபால் ஊழியர் இன்று ஆராய்வர்

யாழ்ப்பாணம், வெள்ளி

அண்மையில் ஏற்பட்ட கலவரங்களினால் பாதிக்கப்பட்ட அஞ்சல், தபால் ஊழியர்கள் மீண்டும் தமது நிலை குறித்து இன்று காலை 10-00 மணிக்கு யாழ். தபாலக இளைப்பாற்று மண்டபத்தில் கூடவுள்ளனர்.

இக்கூட்டத்தில் அஞ்சல் தொலைத் தொடர்புச் சேவையாளர் சங்கத்தின் தாய்ச்சங்கச் செயலாளர் திரு. பவில்டி. இல்வாவும் கலந்துகொள்கிறார். (கெ-இ)

### பலநோக்குகூட்டுறவுச் சங்க

# ஊழல்கள்; ஊழியர்புகார்கள்

# விசாரணை செய்யகமிஷன்

கொழும்பு, வியா.

"பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் நடைபெற்ற ஊழல் முறைப்பாடுகளையும், ஊழியர் புகார்களையும் விசாரணை செய்ய, மாவட்ட ரீதியாக தனிநபர் கமிஷன் ஒன்று நியமிக்கப்படவிருக்கிறது."

இத்தகவலை, உணவு கூட்டுறவு அமைச்சர் திரு. எஸ். பி. ஹெரத் தெரிவித்தார்.

நாடெங்கிலும் உள்ள 280 பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் நடைபெற்ற ஊழல்கள்பற்றியும், அரசியல் பழிவாங்கல் காரணமாக வேலைநீக்கம், இடமாற்றம் செய்யப்பட்ட ஊழியர் புகார்பற்றியும் இக்கமிஷன் விசாரணை செய்யும்.

27 கூட்டுறவு மாவட்டங்களிலும் கூட்டுறவு ஊழியர் விசாரணைக் கமிஷன் நியமிக்கப்படும்.

விசாரணைக் கமிஷன் நடாத்துவதற்குத் தேவையான ஒழுங்குகளையும் தஸ்தாவேஜுகளையும் பெற்றுக்கொடுப்பது சகல எம். பிக்களின் கடமையாகும் என்று எம். பிக்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## ஏழைப் பிள்ளைகளுக்கு அபயம் அளிப்பீர்!

### தமிழக அமைச்சர் கோரிக்கை

சென்னை, செப். 29

"ஆசிரியத் தம்பதிகளைப் பிரிக்கும் எண்ணம் தமிழக அரசுக்குக் கிடையாது" என்று தமிழக கல்வியமைச்சர் திரு. அரங்கநாயகம் கூறினார்.

திருநெல்வேலியில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு அவர் பேசுகையிலேயே மேற்கண்டவாறு சொன்னார்.

அவர் மேலும் பேசுகையில் 'ஒரே பாடசாலையில் கல்விகற்பிக்கும் கணவன் மனைவியான ஆசிரியத் தம்பதிகளைப் பிரிக்கும் எண்ணம் அரசுக்குக்கிடையாது எனினும் சில நேரங்களில் இவர்களை ஒரே பாடசாலையில் கல்வி கற்பிக்கச் செய்வதில் சில தடங்கல்களும் ஏற்படத்தான் செய்கின்றன.

ஆசிரியத் தம்பதிகள் இதனைப் பொறுத்துக் கொண்டு சிறப்பான கல்விப் பணியாற்ற வேண்டும்" என்றார்.

"மாணவரின் எதிர்காலம் ஆசிரியரின் கரங்களில் தாம் உள்ளது" என்று அமைச்சர் வலியுறுத்தினார்.

### ஏழைகள் வாழ்வில் ஏற்றம்

அமைச்சர் திரு. எட்மண்ட் பேசுகையில் "கல்வி பெற வசதியின்றி வாழ்வின் இருண்ட பகுதியில் உள்ள ஏழைப் பிள்ளைகளை வசதிபடைத்த செல்வந்தர்கள் 'சுவீகாரம்' எடுத்து அவர்கள் வாழ்வில் கல்வி ஒளியேற்ற வேண்டும்" என்று கேட்டுக்கொண்டார். (உ)

## மரக்கடன் பெறுவதில் கஷ்டம்

மட்டுவில், வியா.

வடபகுதியிலுள்ள 19 தெங்கு- பனம் பொருள் உற்பத்தி கூட்டுறவுச் சங்கங்களில் ஒன்றுமட்டுமே வங்கிக் கடன், வரிநிலுவை அனைத்தையும் செலுத்தியுள்ளது முன்னைய வங்கிக்கடன், வரிநிலுவை ஆகியவற்றைச் செலுத்தாத காரணத்தினால் ஏனைய சங்கங்கள் வங்கியில் கடன் பெறமுடியாத நிலையிலுள்ளன.

இதனால் பெரும்பான்மையான தெங்கு-பனம் பொருள் உற்பத்திக் கூட்டுறவுக் சங்க உறுப்பினர்கள் மரக்கடன் பெறமுடியாத நிலையிலுள்ளனர்.

தெங்கு-பனம் பொருள் உற்பத்தி கூட்டுறவுச் சங்கங்கள் கடந்த காலங்களில் பெருந்தொகையான கள் தவறணைகளில் மிகுதப்பட்டு அவற்றை வெளியே ஊற்றியதைத் தொடர்ந்தும், அரசு விதித்த அதிகப்படியான வரிகளாலும் கலால் பகுதியினர் ஒத்துழைக்காத காரணத்தினாலுமே சங்கங்களுக்கு இச் சோர்வு நிலை உருவானதாக சங்க நிர்வாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (இ)

## இலங்கை-சீன பேச்சுவார்த்தை

கொழும்பு, வியா.

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையில் உயர்மட்ட வர்த்தக பேச்சுவார்த்தை பீகிங்கில் அடுத்த மாதம் நடைபெறவிருக்கிறது.

இப்பேச்சுவார்த்தையின் போது பூரணமாக புதிய வர்த்தக ஒப்பந்தமும், கொடுப்பனவு ஒப்பந்தமும் செய்து கொள்ளப்படும்.

முன்னைய அரசினால் சீனாவுடன் செய்துகொள்ளப்பட்ட 5 வருட வர்த்தக ஒப்பந்தம் இந்த வருடத்துடன் முடிவடைகின்றது.

வர்த்தக ஒப்பந்தத்தின்படி இலங்கைக்குத் தேவையான ஜவுளிகள், உள்ளி, மல்லி மற்றும் கட்டுப்பாட்டு பொருட்கள் பெற்றுக்கொள்ளும். (க)

## கல்விஉலகின் தந்தை வண.ஸ்மித்

கிறிஸ்தவ துறவியாக 1930-ம் ஆண்டு இலங்கைக்கு வந்த பெருமகான் வணக்கத்துக்குரிய ஸ்மித் தொண்டுள்ளம் தியாகசிந்தை பேராற்றல் நிறைந்த கல்விமானாவார். அன்னார் 1958ம் ஆண்டுமுதல் 1956-ம் ஆண்டுவரை யாழ்ப்பாண மத்தியகல்லூரியின் அதிபராகக்கடமையாற்றி கல்லூரியின் வளர்ச்சிக்கு அரும்பெரும் தொண்டாற்றினார். வண. ஸ்மித் யாழ். மத்திய கல்லூரியின் வளர்ச்சிக்கு வண.ஸ்மித் ஒருமைல் கல் என்பதை யாரும்மறுக்கமுடியாது. அன்னார் ஆகஸ்ட் மாதம் 5-ந்திகதி ஆஸ்ரேலியாவில் காலமானசெய்தியைக் கேட்டு கலங்காத இதயங்கள் இல்லையென்றே சொல்லலாம்.

அன்னார் 11 ஆண்டுகள் யாழ்.மத்திய கல்லூரியில் சேவையாற்றியிருப்பினும் குறுகியகால எல்லைக்குள் இன்று வானளாவிநிற்கும் மண்டபங்களை உருவாக்கினார். இவரது சேவைக்காலத்தில் மட்டுமே 300க்கு அதிகமான மாணவ மாணவிகள் விடுதிமாணவர்களாக இருந்தனர் மாணவ மாணவிகளிடையே பெற்றதந்தையைப் போன்று பக்குவமாக நடந்து கொள்ளும் ஆற்றலினால் கல்விஉலகின் தந்தை எனப்போற்றப்பட்டார். அன்னாரின் சேவையில் அவருடைய துணைவியார் ஜோய் அவருக்கு இணையாக சேவையாற்றி பெரும்பணி புரிந்ததையும் எவரும் மறுக்கமுடியாது.

வடபகுதியின் பெரும்கல்வி

[5-ம்பக்கம் பார்க்க)

# "மக்கள் அளித்த அதிகாரத்தின் மூலம் அவர்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவோம்"

## பிரதமர் ஜே. ஆர். உறுதி

கொழும்பு, வியாழன்

"மக்கள் எமக்கு வழங்கியுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்ற நாம சகல முயற்சிகளையும் மேற்கொள்வோம்" என்று பிரதமர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன கூறினார்.

தாம் கல்வி பயின்ற கொழும்பு றோயல் கல்லூரிக்குப் பிரதமர் நேற்று விஜயம் செய்தார்.

அங்கு பழைய மாணவர்கள், தற்போதைய மாணவர்கள் மத்தியில் பிரதமர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

"மாணவர் விளையாட்டுத் துறையில் கூட்டுமனப்பான்மையுடன் ஈடுபடவேண்டும். அரசியலிலும் இக் கூட்டுமனப்பான்மை நீடிக்கவேண்டும்.

"றோயல் கல்லூரி உயர்ந்த இலட்சியங்களையும் ஒழுக்கத்தையும் போதித்து வந்துள்ளது.

"இக் கல்லூரி இந் நாட்டின் பிரதமர்களை மட்டுமல்ல பல் துறைகளில் பிரபல்யம்பெற்ற பிரமுகர்களையும் உருவாக்கியுள்ளது."

"இக்கல்லூரியின் முன்னாள் மாணவர்களான கல்வியமைச்சர் திரு. நிஸங்கவிஜயரத்ன, கைத்தொழில் அமைச்சர் திரு. சிறில் மத்யூ, வர்த்தக அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி உட்பட பலரும் பிரதமர் உரை நிகழ்த்திய போது சமூகமளித்திருந்தனர்.

கல்லூரி அதிபர் திரு பீரிஸ் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார். (உ)

ஏழாலை கோர தீ விபத்து:

## பிள்ளைகள், உடைமைகளை இழந்த குடும்பத்திற்கு உதவி

யாழ்ப்பாணம், வெள்ளி

சுன்னாகம் பொலிஸ் பகுதியில் உள்ள ஏழாலை மயிலங்காட்டில் இம்மாத முற்பகுதியில் நிகழ்ந்த துயரம் நிறைந்த தீவிபத்தினால் தமது மூன்று பிள்ளைகளையும் மாமியாரையும் இழந்து தவிக்கும் வீரமுத்து குடும்பத்திற்கு நிதியுதவி அளித்து ஆதரவளிக்குமாறு கோரப்படுகிறது.

திரு. வீரமுத்துவிற்கு நேரடியாக பல பொதுஸ்தாபனங்களும், பிரமுகர்களும், வாலிபர்களும் நிதியுதவி அளித்து வருகின்றனர்.

பாடசாலைகளும் இவரது குடும்பத்திற்கு நிதியுதவியை இவருக்கு நேரடியாக வழங்குகின்றன.

ஏழ்மை மிகுந்த சூழ்நிலையில் எதிர்காலத்தை எவ்விதம் சிறப்பாக்கிக் கொள்வது என்ற ஏக்கத்துடன் உள்ள திரு. வீரமுத்து இரக்க சிந்தையுள்ளோர் அளிக்கும் தம்மாலியன்றளவு உதவியைக் கொண்டே எதிர்காலம் பற்றிய நம்பிக்கையைப் பெறக் கூடியதாக இருக்கும் எனக் கருதப்படுகிறது.

இம்மாதம் 8ம் திகதி நள்ளிரவு திரு வீரமுத்துவும் மனையும் வீட்டில் இல்லாதசமயம் வீடு தீப்பற்றியதால் வீட்டில ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த இவரது மகளான ராகினியும் (வயது 7), மகன்களான மனோகரன் (9வயது) ராஜதுரை (16 வயது) ஆகியோரும மாமியார் பூபதியும் (வயது 55) கருகி துடிதுடித்து மாண்டது தெரிந்ததே.

இக்கோர தீவிபத்தினால் திரு வீரமுத்துவின் உடைமைகளும் வீடும் முற்றுக எரிந்துசாம்பராகின. (உ)

## இடம் பெயர்ந்து வந்த டாக்டரின் வீட்டில் கொள்ளை

பண்டத்தரிப்பு, வியாழன்

அண்மையில் ஏற்பட்ட கலவரங்களினால் இடம்பெயர்ந்து தமது சொந்த இடத்திற்குத் திருமபிய டாக்டர் ஒருவரின் வீடு உடைக்கப்பட்டுக் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது பற்றிய விபரம் வருமாறு:

கல்கமுவாவிலிருந்து 8 மைல் தூரத்திலுள்ள எஹெட்டுவெவ என்ற இடத்திலுள்ள அரசினர் வைத்தியசாலையின் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிய டாக்டர் எஸ். கணேசையா என்பவர் சமீபத்தில் ஏற்பட்ட கலவரத்தையடுத்து இடம் பெயர்ந்து, தமது குடும்பத்துடன் சொந்த ஊரான அளவெட்டிக்கு வந்துள்ளார்.

கடந்த வாரம் எஹெட்டுவெவ அரசினர் வைத்தியசாலைக்குப் பக்கத்திலுள்ள இவரின் வீடு உடைக்கப்பட்டுப் பொருட்கள் யாவும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாகக் கல்கமுவாப் பொலிஸார், சுன்னகம் பொலிஸார் ஊடாக மேற்படி டாக்டருக்குத் தகவல் தெரிவித்துள்ளனர்.

### மற்றுமொரு டாக்டர் வீடு கொள்ளை

குருநாகல் சுகாதார சேவை அத்தியட்சகர் அலுவலகத்தில் பதிவுபெற்ற வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றும் டாக்டர் எஸ். சண்முகராசா என்பவர் சமீபத்தில் ஏற்பட்ட கலவரத்தினால் தமது சொந்த ஊரான அளவெட்டியில் வந்து தங்கிவிட்டு, அரசாங்கத்தின் அறிவித்தலுக்கு இணங்கிக் கடந்த 19ந் திகதி மீண்டும் வேலைக்குச் சென்றபோது அவரின் வீடு உடைக்கப்பட்டுக் கொள்ளையடிக்கப்பட்டிருந்ததாம்.

தமது வீடு உடைக்கப்பட்

(5ம் பக்கம் பார்க்க)

## அடைவுபகுதி மூடப்பட்டது

பண்டத்தரிப்பு, வியாழன்

பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திலுள்ள கிராமிய வங்கியில் நகை அடைவுவைக்கும் பிரிவு மூடப்பட்டுள்ளது. இதனால் தங்கள் அவசர தேவைகளுக்காக நகைகளை அடைவு வைத்து பணம் எடுக்க முடியாது இப்பகுதி மக்கள் மிகுந்த சிரமப்படுகின்றனர்.

இதுபற்றி மேற்படி கிராமிய வங்கியின் அதிகாரி ஒருவரை விசாரித்தபோது கூட்டுறவு உதவி ஆணையாளரின் உத்தரவிற்கிணங்க நகை அடைவு வைக்கும்பகுதி மறு அறிவித்தல்வரை நிறுத்திவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். (இ)

## பாதிக்கப்பட்ட தமிழர் புனர்வாழ்வு நிதி

தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக்கான பிரஜைகள் குழுவின் நிதிக்கு பொதுமக்களிடமிருந்து இதுவரை ரூபா 69069-44 சதம் கிடைத்துள்ளது. இந் நிதிக்கு பணம் செலுத்த விரும்புகிறவர்கள் இலங்கை வர்த்தக வங்கி யாழ். கிளை கணக்கு இல. 3840/-க்கு நேராகச் செலுத்தலாம் அல்லது பொருளாளர்களான யாழ். வர்த்தக வங்கி முகாமையாளர் திரு லங்கா நேசையா அல்லது சீமாஸ் இன்டஸ்றீஸ் நிர்வாக இயக்குநர் திரு. ஆர். ஜே. குணரத்தினமிடமும் செலுத்தலாம்.

| | |
|---|---|
| ஏற்கனவே சேர்ந்த நிதி ரூபா | 58329-89 |
| வேலணை கிழக்கு கிராம முன்னேற்றச்சங்கம் | 5852-00 |
| கைதடி மேற்கு சனசமூக நிலையம் | 490-00 |
| யாழ். மாவட்ட நீதிமன்ற ஊழியர்கள் | 145-00 |
| கு. பெரியதம்பி புலோலி | 100-00 |
| சங்கானை மாவடி வைரவர் ஆலய இந்து மாமன்றம் | 435-00 |
| ஏ. வேலுப்பிள்ளை, சரசாலை | 5-00 |
| வ. செல்லமுத்து, சரசாலை | 10-00 |
| தமிழர் விடுதலை கூட்டணி, சரசாலை கிளை | 185-00 |
| புலோலி மேற்கு நாவலர் சனசமூக நிலையம் | 280-00 |
| வி. முத்தையா, ஏழாலை | 66-00 |
| சித்தன்கேணி கணேச வித்தியாசாலை | 25-00 |
| மானிப்பாய் சென்ற் ஆன்ஸ் பாடசாலை | 56-00 |
| ஆனைப்பந்தி மெ. மி. த. பாடசாலை | 40-00 |
| அராலி இந்துக் கல்லூரி | 130-00 |
| மாதகல் சென் ஜோசேப் மகா வித்தியாலயம் | 200-00 |
| நயினாதீவு நாகபூஷணி வித்தியாசாலை | 18-55 |
| ஊரெழு கணேச வித்தியாசாலை | 50-00 |
| சாந்தை சிற்றம்பலம் வித்தியாசாலை, பண்டத்தரிப்பு | 35-00 |
| | 165-00 |
| நெல்லியடி மெ. மி. பாடசாலை | 230-00 |
| யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம் | 55-00 |
| சுழிபுரம் கிழக்கு அ. மி. த. க. பாடசாலை | 18-00 |
| வல்வெட்டித்துறை றே. க. த க. பாடசாலை | 15-00 |
| சிறுவிளான் கனகசபை வித்தியாலயம், இளவாலை | 140-00 |
| உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாலயம் | 132-00 |
| சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலயம் | 50-00 |
| செலா தமிழ் வித்தியாலயம் | 177-50 |
| பொலிகண்டி இந்துத் தமிழ் கலவன் பாடசாலை | 10-00 |
| மண்கும்பான அர. முஸ்லிம் கனி வித்தியாலயம் | 10-00 |
| தம்பாட்டி அ. த. க. பாடசாலை ஊர்காவற்றுறை | 120-00 |
| வடலூர் அ. த. க. பாடசாலை, அனலைதீவு | 10 00 |
| ஆனையிறவு அ. த. சி க. பாடசாலை | 56-00 |
| கோப்பாய் தெற்கு றே. க. த. பாடசாலை | |
| மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயம் கொடிகாமம் | 130-00 |
| மந்துவில் றே. க. த. க. பாடசாலை, கொடிகாமம் | 75-00 |
| | 15-00 |
| சிவநகர் அ. த. க. பாடசாலை, உருத்திரபுரம் | |
| சந்திரபுர ஸ்கந்தவரோதய ம. வி. சாவகச்சேரி | 115-00 |
| | 205-00 |
| உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயம் | 147-00 |
| வீமன்காமம் ம. வி. தெல்லிப்பழை | 80-00 |
| குருசாமி கனிஷ்ட வித்தியாலயம், கைதடி | 105-00 |
| தேவரையாளி இந்துக் கல்லூரி, வதிரி | 120-00 |
| அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை | 436-00 |
| அத்தியார் இந்துக் கல்லூரி, நீர்வேலி | |
| மொத்தம் ரூபா | 69069-44 |

# பாதிக்கப்பட்ட ஊழியருக்கு 3 மாதச் சம்பளமுற்பணம்

யாழ்ப்பாணம், வெள்ளி

பாதிக்கப்பட்ட தமிழ் அரச ஊழியர்களுக்கு வட்டியில்லாத 3 மாதச் சம்பள முற்பணம் வழங்கப்படவிருப்பதாக அரசாங்கச் சுற்றுநிருபம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இப்பணம் 36 மாத காலத்தில் அறவிடப்படுமெனவும், அந்தச் சுற்றுநிருபத்தில் கூறப்பட்டுள்ளது.

செப்டம்பர் மாதச் சம்பளம் சகல பாதிக்கப்பட்ட ஊழியர்களுக்கும், அவரவர் பிரத்தியேக விலாசத்திற்கோ, திணைக்களக் கிளைகளுக்கோ அனுப்பி வைக்குமாறு பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியர் கழகம் சகல திணைக்களங்களையும் கோரியுள்ளது.

இதுவரை ஆகஸ்ட் மாதச் சம்பளம் பெறாத பாதிக்கப்பட்ட ஊழியர்கள் உடனடியாகக் கழகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

3 மாதச் சம்பள முற்பணம் பெற விரும்புவோர் உடனடியாகத் தங்கள் திணைக்களத்திற்கு விண்ணப்பிப்பதுடன், கடிதப் பிரதியைப் பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியர் கழகத்திற்கு அனுப்பிவைக்குமாறு கோரப்பட்டுள்ளனர். (க)

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு

# இடமாற்றம் கோரி

## 1500 ஊழியர் விண்ணப்பம்

யாழ்ப்பாணம் வெள்ளி

பாதிக்கப்பட்ட தமிழ் அரச ஊழியர்களில் இதுவரை 500 பேர் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு இடமாற்றம் கோரி விண்ணப்பித்துள்ளனர்.

மேலும் 1000 பேர் இடமாற்றத்திற்கு விண்ணப்பிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுவதாக பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியர் கழக இணைச்செயலாளர் திரு. பி. சண்முகசாமி தெரிவித்தார்.

இடமாற்றம் பெறவிரும்பும் ஊழியர்கள், தங்கள் இலாகாவிற்கு விண்ணப்பித்த பிரதியொன்றை பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியர் கழகத்திற்கு அனுப்பிவைக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

கழகத்திற்கு அனுப்பி வைக்கப்படும் பிரதிகள் யாவும், சகல திணைக்களங்களுக்கும் கழகத்தினால் அனுப்பிவைப்பதுடன் இடமாற்றம் கோரும் ஊழியர் பட்டியல் ஒன்று பிரதமருக்கும் அனுப்பி வைக்கப்படுமென்றும் அவர் கூறினார்.

இதுவரை மாற்றத்திற்கு விண்ணப்பித்த தமிழ் ஊழியர்கள், அநுராதபுரம் பொலநறுவா, தம்புள்ள, மாத்தளை கல்கமுவ, மஹோ, நிக்கவரட்டியா, குருணாகல், கண்டி, நுவரெலியா, களுத்துறை கொழும்பு, அவிசாவலை, கேகாலை ஆகிய இடங்களில் கடமை யாற்றியவர்களாகும்.

இதே சமயம் பாதிக்கப்பட்ட தமிழ் ஆசிரியர்களில் 1000 பேர் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு இடமாற்றம் கோரி விண்ணப்பித்துள்ளனர்.



30—9—77 வெள்ளி

(செய்திகள்: காலை 6-30 பகல் 12-45, மாலை 6-00 இரவு 9-00)

6-05 சைவ நற்சிந்தனை வி. வி. கே. ஆறுமுகம், 6-10 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-50 ஞானமிர்தம், 7-00 திருமுறைப்பாடல்கள் -ஞானகுலேந்திரன், 7-35 இசைக்கோவை.

மாலை 6-20 பொலிசாரும் நாமும், 6-30 பாட்டு-கலாநாயகி சின்னத்தம்பி, 7-00 நாடகமேடைப் பாடல்கள்-தர்மபுத்திரன் - வட்டுக்கோட்டை நாட்டுக்கூத்து அபிவிருத்திக் கழகக் கலைஞர்கள். 7-35 அருளமுதம்-குமரகுருபர சுவாமிகள், 8-05 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 நாகசுரம் எஸ். மாணிக்கசாமி, 10-15 பக்திப் பாடல்கள். (இக)

நாகம்மஸ்
(சுன்னுகம்)
தினசரி 6 45 10-00
எஸ். எஸ். ஆர்.
விஜயகுமாரி
பூமபுகார்

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி பி. ப. 2-30, 7-00
வல்லவன்
ஒருவன்

RIO (Jaffna) Daily 10-30, a.m. 4-45, 7-00 p. m.
FURY
AT THE SMUGGLER'S BAY

மனோஹரா (யாழ்ப்பாணம்) எம். ஜி. ஆர். - லதா-நாகேஷ்
அறிமுகம் பவானி
தினசரி மு.ப. 10-30 பி.ப. 2-30 6-30, 9-45
நடித்த
உழைக்கும் கரங்கள்
(ஈஸ்ட்மன் கலர்)

சாந்தி யாழ். நகர் போன்: 7642
தினசரி 10-30, 2-30, 6-30 9-45
ஃ சிவாஜி (மூன்று வேடங்கள்)
ஃ ஜெயலலிதா
தெய்வ மகன்
(புதிய பிரதி)

வெலிங்டன் (யாழ். நகர்) தினசரி 10-30, 2-30 மாலை 6-00
விஜயகுமார் — ஜெய்சித்ரா
தாய் இல்லாக் குழந்தை

லிடோ போன்; 7693 (யாழ்.நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00
எஸ். எஸ். ஆர். — விஜயகுமாரி
பணம் பந்தியிலே
அடுத்த வெளியீடு திக்கு தலை வணங்கு

Regal (Jaffna)
Daily at 10-30 a.m., 4-45 & 7-00 p. m.
"SHARK"
(Action Film color)

வின்ஸர் (யாழ்ப்பாணம்) தினசரி 10-30, 2-30, 6-00
சிவாஜி, மஞ்சுளா, தேவிகா, கமலஹாசன், ஜெயசித்ரா நடித்த
சத்யம்
(ஈஸ்ட்மன் கலர்)

ராஜா (யாழ்நகர்) தினசரி 10-30, 2-30, 6-00
போன்: 7180
ஜெய்சங்கர் - ராஜஸ்ரீ-நாகேஷ்
நடித்த
பூவா தலையா [புதியபிரதி]

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி காலை 10-30, 2-00, மாலை 5-00.
சனி, ஞாயிறு 10-00, 1-00, 4-00, 6-30
சிவகுமார்-சுஜாதா-ஸ்ரீகாந்த்
நடித்த
அன்னக்கிளி

ராணி (யாழ்ப்பாணம்)
ஜெய்சங்கர் - பத்மினி - லக்ஷ்மி
முத்துராமன் - நாகேஷ் - சச்சு
தினசரி காலை 10-30, பிற்பகல் 2-00, 6-00
தேவரின்
பெண் தெய்வம்

# "ஒருபுறம் அன்பு; மறுபுறம் வெறுப்பு"

## தனது நிலைபற்றி 'அமிர்'

சுழிபுரம், வியாழன்

"இலங்கையில் வாழும் ஒரு பகுதி மக்களின் அன்புக்குரியவனாக இருக்கும் நான் வேறு ஒரு பகுதி மக்களின் சர்ச்சைக்குரியவனாகவும் வாழ்கின்றேன். சிறுபான்மை இனத்தின் பிரதிநிதி ஒருவர் இதுவரை எதிர்கட்சித் தலைவராக வந்ததோ இனிமேல் இப்படிவரவோ ஒரு வாய்ப்பு ஏற்படும் என்று நான் எண்ணவில்லை. ஏதோ தெய்வ அருளால் இப்பதவி எம்மிடம் வந்துள்ளது. எமக்கு இப்பதவி பெரிதல்ல இப்பதவியைப் பொறுப்பேற்ற பின்னர் எமக்கு ஒரு பெரும் சுமை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் புதிய கட்டிடம் ஒன்றுக்கான அடிக்கல்லை நாட்டி வைத்துப் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் குறிப்பிட்டார்.

திவிழாவுக்கு கல்லூரி அதிபர் வரு எஸ். ஸ்பென்சர் தலைமை கித்தார். கல்லூரி முன்னாள் அதிபர் திரு வை. இராசசுந்தரம் வரவேற்புரை நிகழ்த்தினார்.

திரு. அமிர்தலிங்கம் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

இக் கல்லூரியில் நான ஒன்பது வருடங்கள் கல்விகற்றுள்ளேன். இங்குள்ள நூல் நிலையப் பொறுப்பாளனாக நான் இருந்து சகல நூல்களையும் வாசிக்கும் வாய்ப்பைப் பெற்றேன். கல்வி கற்கும் மாணவர்கள் ஆரம்பகாலத்திலேயே தங்கள் அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும். அரசாங்கம் தரப்படுத்தலை நீக்கியுள்ளது ருக்கான ஒரு பூரணைப்படுத்தப்பட்ட பல்கலைக் கழகத்தை உருவாக்க நடவடிக்கை எடுத்தே தீருவோம். எமது மக்கள் இலங்கையில் மட்டும் வாழவில்லை. இன்று லண்டன், அமெரிக்கா, ஆபிரிக்க நாடுகளின் பல்வேறு பகுதிகளிலும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர் அண்மையில் ஏற்பட்ட வன்செயல் சம்பவங்களை அறிவதில் அவர்கள் பெரிதும் அக்கறை காட்டினார்கள். அவ்வளவு தூரம் உலகம் பூராவும் எங்கள் மக்கள் அறிவைப் பெற்று வாழும்போது நாம் எங்கள் பிள்ளைகளுக்கு நல்ல அறிவை புகட்ட முன்வரவேண்டும். சிவபாதசுந்தரம், சிறோல், தம்பியப்பா போன்ற அறிஞர்களால் கட்டி எழுப்பப்பட்ட இக்கல்லூரி மேலும் முன்னேற்றம் காணும் என்பது திண்ணம்.

வடமாநில கல்வி அதிபர் திரு. எஸ். சிவநாதன் பேசுகையில், "இக்கல்லூரியில் கற்ற திரு. அமிர்தலிங்கம் மிகவும் திறமையுடையவராக மிளிர முடியுமானல ஏன் இங்கு கல்வி கற்கும் ஒவ்வொரு மாணவனும் அமிர்தலிங்கங்களாக வரக்கூடாது? இக்கல்லூரிக்கு பெருமை தேடித்தந்த திரு. அமிர்தலிங்கம் போன்ற அரசியல் தலைவர்கள் கல்வி சம்பந்தமான பணிக்குப் பெருந்தொகையான பணத்தை அரசிடமிருந்து பெற்றுக்கொடுப்பதில் முதலிடத்தை வகிக்கின்றனர். இன்று பெருந்தொகையான பணம் வடபகுதியில் கல்விக்காக செலவு செய்யப்படுகின்றது" என்றார். பெற்றார்-ஆசிரியர் சங்க உபதலைவர் திரு கு. கந்தையா நன்றி கூறினார்.

## கல்விஉலகின்—

(3ம் பக்கத் தொடர்ச்சி)

மான்களான திருவாளர்கள் ஏ. ஈ. தம்பர், கே. நவரெட்னம், ஆர். சி. ஜேக்கப், ஜி. என். எட்வட், ஜே. சி. சி சால்ஸ், ஐ. ஏபிரகாம் ஜே. எம் செல்லத்துரை ஆகியோர் இவரின் கீழ்சேவையாற்றிப் புகழ் பெற்றனர்.

வண. ஸ்மித் அவர்களே முதல்முதலில் பாடசாலைகளில் செயல்முறைப்பயிற்சிகளை உருவாக்கிய பெருமைக்குரியவர். அன்னாரின் காலத்தில் மரவேலை, உலோகவேலை ஆகியவற்றில் பயிற்சியளிக்கப்பட்டது.

அன்னார் மதத்துக்குமட்டும் சேவையாற்ருமல் பொதுத் துறைக்கு பெரும்பணியாற்றினார். அன்னார் மறைந்தாலும் அன்னாரின் பெரும்பணிகள் மறையாது.

—ஜெயந்தி

## இடம் பெயர்ந்து—

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

டுப் பெறுமதி வாய்ந்த பொருட்கள் யாவும் கொள்ளையடிக்கப்பட்டிருப்பதினால்தான் தங்கியிருப்பதற்கு வீட்டு வசதி எதுவும் இல்லையென்றும் இதனால் வேலைக்கு வரமுடியாதிருப்பதாகவும், தமது தலைமை அதிகாரியான குருநாகல் சுகாதாரச் சேவை அத்தியட்சகருக்கு அறிவித்துவிட்டு மீண்டும் ஊருக்குத் திரும்பியுள்ளார். (பண். நி-இ)

உணவு இலாகாவுக்கு

## தீட்டப்படாத அரிசியை முதலாளிகள் விற்கின்றனராம்

கொழும்பு, வியாழன்

இரக்க சிந்தையற்ற சில அரிசி ஆலைச் சொந்தக்காரர்கள் தீட்டப்படாத அரிசியை நிறைக்காக உணவு இலாகாவுக்கு விற்று சுலபமாகப்பணம் சம்பாதிக்கின்றனர் என்று உத்தியோக பூர்வவட்டாரங்கள் தெரிவித்தன.

இவர்கள் வழக்கமாகப் பெறும் பணத்திலும் பார்க்கக் கூடுதலான பணத்தை உணவு இலாகாவிடம் இருந்து பெறுகின்றனராம்.

கூட்டுறவுச்சங்கக்கடைகளில் தங்களுக்குத் தீட்டப்படாத அரிசி விநியோகிக்கப் படுவதாக நுகர்வோர் முறையிட்டுள்ளனர். (உ)

## "இளைஞர் சமுதாயம் பண்பாடு காக்க வேண்டும்"

யாழ்ப்பாணம், வெள்ளி

'இன்றைய இளைஞர் சமுதாயம் நமது கலை கலாச்சாரத்தை பண்பாடுகளைப் பேணிக் காப்பதோடு, காலத்தின் தேவையறிந்தும் செயற்பட வேண்டும்.'

இவ்வாறு மானிப்பாய் இந்துக்கல்லூரியின் கலை மாணவர் மன்றம் கலாயோகி ஆனந்தக் குமாரசுவாமியின் ஜெயந்தி விழாவினைக் கொண்டாடிய போது சிறப்புச சொற்பொழிவாற்றிய திரு. அ. குமரன் மேற்கண்டவாறு கூறினார்.

கலைமாணவர் தலைவர் செல்வன் த. ரவீந்திரமோகன் தலைமையில் இவ்விழா நடைபெற்றது.

திரு. குமரன் தொடர்ந்து பேசுகையில் "கலாஜோதி ஆனந்தகுமாரசாமிஅவர்களது சேவை மறக்க முடியாதது. அவரது சிவதாண்டவ விளக்கமும் நமது கலை கலாச்சாரப் பாரம்பரிய ஆராய்ச்சிகளும் மகத்தானவை. இத்தகைய ஜெயந்தி விழாக்களையும்நினைவு தினங்களையும் கொண்டாடி விட்டு அதன் காரணகர்த்தாக்களது பணியை மேடையிற் பேசி முடிந்ததும் மறந்துவிட்டு வாழ்வது அவர்களுக்கு இழைக்கும் அவமானமேயாகும். மேலும் அறிவு கலை ரீதியான இந்த ஆராய்ச்சிகளோடு மட்டும் கலாயோகி ஆனந்தகுமாரசாமியைப் போற்றிப் புகழ்வதோடு நிறுத்தி விடாமல் இளைய சமுதாயம் நமது கலை கலாச்சாரப் பண்பாடுகளைக் காண்பதோடு காலத்தின் தேவையறிந்தும் செயற்பட வேண்டும்" என்றும் குறிப்பிட்டார். (கா-உ)

## பாலர் பாடசாலை ஆசிரியைகள் பாதிப்பு

யாழ்ப்பாணம், வெள்ளி

பாடசாலைகளில் 5 வயது நிரம்பிய பிள்ளைகளை அனுமதிப்பதென்ற அரசின் முடிவைத் தொடர்ந்து நாட்டில் ஆயிரத்திற்கு மேற்பட்ட பாலர் பாடசாலை ஆசிரியைகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த அரசாங்கம் பாடசாலைகளில் பிள்ளைகளை அனுமதிக்கும் வயதை ஒரு வருடம் கூட்டியதைத் தொடர்ந்து நாடெங்கும் பாலர் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டுப் படித்த யுவதிகள் ஆசிரியையாகக் கடமையாற்றிவந்தனர்

உள்ளூராட்சி மன்றங்களும், சட்ட ரீதியான பாலர் பாடசாலைகளை நடாத்தி, ஆசிரியைகளுக்கு மாதம் 150 ரூபா சம்பளம் வழங்கிவந்தன. சில இடங்களில் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் பாலர் பாடசாலைகளை நடத்திவந்தன

பாலர் பாடசாலை ஆசிரியைகளுக்கு ஒரு வருடப் பயிற்சி வகுப்புகள் நடாத்தப்பட்டுத் தராதரப் பத்திரமும் வழங்கப்பட்டுவந்தது. ஆனல் கடந்த அரசு இவர்களுக்கு உத்தியோகபூர்வமான நியமனம் எதுவும் வழங்கவில்லை

ஐக்கிய தேசியக் கட்சி அரசு பாடசாலைகளில் பிள்ளைகளை அனுமதிக்கும் வயதைக் குறைத்ததைத் தொடர்ந்து பாலர் பாடசாலை ஆசிரியைகள் பாதிக்கப்பட்டுள்ளனர் (க)

...

## கார்த்திகை விழா நாளை

யாழ்ப்பாணம், வெள்ளி

இலங்கை திருப்புகழ் மாமன்றத்தின் மாதாந்த கார்த்திகை நட்சத்திரவிழா நாளை மாலை நல்லைஞான சம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறுகிறது.

அண்ணாமலை இசைத் தமிழ் மன்றத்தைச் சேர்ந்த செல்வி உதயராணி குமாரசிங்கம் இன்றைய விழாவில் இன்னிசைவிருந்தளிப்பார். (இ)

### மணிவாக்கு

திருட்டுப் பொருள்களை விலை கொடுத்து வாங்குபவன் திருடனைப்போல மோசமானவன்தான். அவதூறுகளைக் காது கொடுத்துக் கேட்பவனும் அப்படியே.
— லோர்ட் செஸ்டர்பீல்டு.

ஈழநாடு
The Eelanaadu

## தமிழ் மக்கள் பிரச்னை

சமீபத்திய வன்முறைச் சம்பவங்கள் இந்தநாட்டுக்குப் பெரும்பாடமாக அமைந்திருக்கின்றது.

தேர்தல் காலத்தின்போது, ஐக்கிய இலங்கை பற்றியும், தனிநாட்டுக் கோரிக்கைபற்றியும் இரு தரப்பிலும் மேடைப்பேச்சுக்களாலும் அறிக்கைகளாலும் சொல்லப்பட்டன. ஆனாலும் தேர்தல் முடிந்த பின் நாட்டில் வன்செயல்கள் தலைதூக்கிவிட்டன.

இந்த வன்செயல்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவில்லையென்ற குற்றச்சாட்டும், அதற்குப் பதிலாக நடவடிக்கை எடுக்கப்பட்டதென்றும் சொல்லப்பட்டது.

இந்த வன்செயல்களைத் தொடர்ந்து இனக்கலவரங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

இதற்கும் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படவில்லையென்ற குற்றச்சாட்டும் சுமத்தப்படுகின்றன.

இந்த வன்செயல்கள் பற்றி எல்லாம் விசாரணை செய்வதற்கு தனிநபர் விசாரணைக் கமிஷன் ஒன்று நியமிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்த விசாரணைக் கமிஷனுக்கு விபரங்கள் தெரிந்த அனைவரும், பாதிக்கப்பட்டவர்களும் எடுத்துச் சொல்ல வேண்டியது அவசியமாகும்.

தமிழ்மக்களுடைய பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு சர்வ கட்சிகளையும் சேர்ந்த வட்டமேசை மாநாடு கூட்டி முடிவுசெய்யலாமென்று பிரதமர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன கூறியிருக்கின்றார்.

வட்டமேசை மாநாடு கூட்டப்படவேண்டியது அவசியமில்லை. மிகப்பெரும் பான்மைப்பலம்பெற்ற இன்றைய அரசாங்கம் தமிழர் பிரச்னையைச் சுலபமாகத் தீர்த்துவைக்கமுடியுமென்று முன்னாள் நிதியமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா கூறியுள்ளார்.

ஆகவே தமிழர் பிரச்னையைத் தீர்ப்பதற்குப் பெரும்பான்மைச் சமூகத்தவர்களைக்கொண்ட தேசிய அரசியல் கட்சிகள் இப்போது பிரச்னைகளைக்கிளப்பவில்லையென்றே தோன்றுகின்றது.

எனவே இந்த நிலையில் கட்சிப் பேதங்களை மறந்து பாதிக்கப்பட்டு வந்துள்ள தமிழ்மக்களையும், இந்த நாட்டில் வாழுகின்ற தமிழ் பேசும் மக்களையும் நிரந்தரமாக வாழ்வளிப்பதற்கு வழி காட்டவேண்டியது தமிழ் மக்கள் அனைவரினதும் பொறுப்பாகும்.

## தினமும் மதிய உணவு வழங்கவில்லையாம்

யாழ்ப்பாணம், வெள்ளி

'அல்வாய் ஸ்ரீ பரமானந்த ஆச்சிரமத்திலுள்ள அகதிகளுக்கு பருத்தித்துறை மெதடிஸ்த பாடசாலை மூன்று அல்லது நான்கு நேர உணவும், தேநீரும் மட்டுமே வழங்கியது.

ஆச்சிரமத்தின் முன்னாள் உபதலைவரும், பருத்தித்துறை லயன்ஸ் கழக முன்னாள் தலைவருமான திரு அ. சோமசுந்தரம் வெளியிட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

''அல்வாய் ஸ்ரீ பரமானந்த ஆச்சிரமத்தில் தங்கியுள்ள 91 அகதிகளுக்கு பருத்தித்துறை மெதடிஸ்த உயர் மகளிர் கல்லூரி மாணவிகள் வகுப்பு ரீதியாக தினமும் மதிய உணவை தயாரித்து வழங்குவதாக இம்மாதம் 19-ந் திகதி 'ஈழநாடு' இதழில் வெளிவந்த செய்தி தவறானதாகும்.

''ஆச்சிரமத்தில் 79 அகதிகள் மட்டுமே உள்ளனர். பருத்தித்துறை லயன்ஸ் கழகமே அகதிகளுக்கான சகல உதவிகளையும் செய்துவருகிறது.

''லயன்ஸ் கழகத் தலைவரும், காரியதரிசியும் ஆதாரப்படுத்தி உறுதிப்படுத்திய பத்திரத்தில் மாத்திரமே விளையாட்டுக் கழக உறுப்பினரோ, அல்லது சன சமூக உறுப்பினரோ பணமோ அல்லது துணிகளோ அன்பளிப்பாக பொதுமக்களிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும்''

## ஒரு விரல்' மர்மம்

அம்பலாங்கொடை, வியா.

யக்கலமுல்ல பகுதியில் கடந்த 25ம் திகதி நடந்த ஒரு கொலைச்செயல் தொடர்பாக, ஒரு விரலை இழந்த கொலையாளியைப் பொலிசார் தேடிவருகின்றனர்.

கொலையுண்டவர் கிடந்த இடத்திற்கு அருகில் கொலையாளியினுடையது எனக் கருதப்படும் ஒருவிரல் கிடக்கக் கண்டெடுக்கப்பட்டது. [உ]

வெளி மாவட்டங்களில்

## டாக்டர்கள் திரும்பாததால் நோயாளிகள் அவதி

கொழும்பு, வியா.

அநுராதபுரம், குருநாகல், கொழும்பு மாவட்டங்களில் உள்ள ஆஸ்பத்திரிகளில் டாக்டர்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் நோயாளிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கலவரத்தை தொடர்ந்து தொடர்ந்து யாழ்ப்பாணம் சென்றுள்ள சுமார் 250 டாக்டர்கள், இன்னும் வேலைக்குத் திரும்பாததினாலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

தினமும் ஆஸ்பத்திரிகளில் நோயாளிகள் நீண்ட நேரம் காத்துநிற்கின்றனர். சில நோயாளிகள சிகிச்சை பெறுமலே திரும்பிச் செல்கின்றனர்.

இம்மாவட்டங்களிலுள்ள திணைக்களங்கள் கடமையாற்றும் ஊழியர்களில் பெரும்பாலானோர் வேலைக்கு திரும்பாததினால் திணைக்கள வேலைகளும் பாதிக்கப்பட்டுள்ளன. சுமார் 2000 பாதிக்கப்பட்ட தமிழ் ஆசிரியர்கள், வேலைக்கு திரும்பாததினால் கண்டி, குருநாகல், அநுராதபுரம் மாவட்டங்களிலுள்ள தமிழ் பாடசாலைகள் ஆரம்பிக்கப்படவில்லை.

சில பாடசாலைகளில் தமிழ் மாணவர்களும் மிகக் குறைவாகவே காணப்படுகின்றனர். கலவரத்தின்போது சேதமடைந்த சில பாடசாலைகளில் திருத்த வேலைகள் நடைபெற்றுவருகின்றன. (க)

## பதவியிலிருந்து விலகினர்

பண்டத்தரிப்பு, வியா.

வட்டுக்கோட்டைத்தொகுதி தமிழ் இளைஞர் பேரவைத் தலைவர் திரு. ஆ. சேயோன், செயலாளர் திரு. த இராசலிங்கம் ஆகியோர் தங்கள் பதவிகளிலிருந்து ராஜினாமாச் செய்துள்ளார்கள்.

வட்டுக்கோட்டைத்தொகுதி தமிழ் இளைஞர் பேரவையின் பொதுக் கூட்டம் கடந்த சனிக்கிழமையன்று வட்டுக்கோட்டைத்தொகுதி கூட்டணிக் காரியாலயத்தில் நடைபெற்றபோதே இவர்கள் தங்கள் ராஜினாமாவைச் சமர்ப்பித்தனர். இதையடுத்து இவர்களின் இடத்திற்கு தற்காலிக நிர்வாகஸ்தர்களாக மூவர் கொண்ட குழுவொன்று தெரிவு செய்யப்பட்டுள்ளது. திரு. பஞ்சாயுதன், திரு. நவரத்தினம், திரு. பொ. கனககுலசிங்கம் ஆகியோரே இவ்வாறு தெரிவு செய்யப்பட்டுள்ள தற்காலிக நிர்வாகஸ்தர்களாகும்.

## டாக்கா விமானக்கடத்தல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஜப்பானிய 'டி. சி. 8' விமானக்கடத்தல்காரர்கள் விடுத்த சகல கோரிக்கைகளையும் ஏற்றுக்கொள்ள ஜப்பானிய அரசு சம்மதித்துள்ளது.

அவசரமாகக் கூட்டப்பட்ட ஜப்பானிய மந்திரிசபையின் விசேட கூட்டத்தில் கடத்தல்காரர்கள் கேட்டுக்கொண்டபடி 9 செஞ்சேனைத் தலைவர்களையும் விடுதலை செய்வதுடன் பணயத்தொகையான 60 லட்சம் டாலர்களையும் வழங்குவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

இதனையடுத்து மேலும் 19 மணித்தியாலங்களை கடத்தல்காரர்கள் பணத்தையும், செஞ்சேனைத்தலைவர்களையும்டாக்கா விமானநிலையத்தில் ஒப்படைப்பதற்கு ஜப்பானிய அரசுக்கு காலக்கெடு விதித்துள்ளனர். ஏற்கனவே இவர்கள் விதித்த காலக்கெடு இன்று காலையுடன் முடிவடைந்தது.

இதேவேளை விமானத்திலிருந்து பாரத,பாகிஸ்தான் நாட்டவர்களையும் பிள்ளைகளையும் கடத்தல்காரர்கள் விடுதலை செய்துவிட்டனர். இவர்களில் 5 பெண்களும் அடங்குவர். இவர்களில் மூவர் பாரதத்தையும் அமெரிக்காவையும் சேர்ந்தவர்களாவர்.

## யாழ். நகரில் சீனதேசிய தினம்

யாழ்ப்பாணம், வெள்ளி

மக்கள் சீனக் குடியரசின் 28-வது தேசிய தினக்கூட்டம் நாளை சனிக்கிழமை யாழ். றிம்மர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கை சீன நட்புறவுச் சங்க யாழ். கிளைத்தலைவர் திரு. நா முத்தையா தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் பேராசிரியர் கா. இந்திரபாலா, எம். எஸ். அமானுல்லா, கே. செந்திவேல் உட்படப் பலர் உரையாற்றுவர். கூட்டமுடிவில் மறைந்த தலைவர் மாவோவின் இறுதி சடங்குகள் பற்றிய திரைப் படமும் காண்பிக்கப்படும். (கா)

### ஆசிரியர் கடிதம்:

## பதவிகளை ஏற்க வேண்டும்

அரசியல் அமைப்பு சட்டத்திற்கு அரசாங்கம் கொண்டுவந்த திருத்தத்தை, ஆதரிப்பதா? எதிர்ப்பதா? அல்லது விவாதத்தில் கலந்து கொண்டு வாக்களிப்பதா இல்லையா? என்பது பற்றி தமிழர் விடுதலைக் கூட்டணி எவ்வித முடிவும் செய்யாத போதிலும், விவாதத்தில் கலந்து கொள்ள மாட்டார்கள் என்ற கருத்து கூட்டணி வட்டாரங்களில் நிலவுகிறது.

சிறுபான்மையினரின் நன்மை கருதி, இத்திருத்தத்தில் தமிழர் விடுதலை கூட்டணியினர், உப-ஜனாதிபதி ஒருவர் மக்களால் தெரிவு செய்யப்பட வேண்டும் என்றும், அவர் ஒரு முஸ்லிமாகவோ, தமிழராகவோ இருக்கவேண்டும் என்று ஒரு திருத்தம் கொண்டுவர வேண்டியது அவசியம்.

இந்தியாவில், வட இந்தியர் ஜனாதிபதியாக இருந்தால் தென் இந்தியர் ஒருவர் உப-ஜனாதிபதியாக இருப்பதற்கு சட்டம் இடமளிக்கிறது. தற்பொழுது தென் இந்தியரான திரு. சஞ்சிவரெட்டியே ஜனாதிபதியாக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஆதலால் தமிழர் விடுதலை கூட்டணியினர் இச்சந்தர்ப்பத்தை தவறவிடாமல், இத் திருத்தத்தை கொண்டுவருவது மட்டுமன்றி விவாதத்தில் கலந்து கொண்டு வாக்களிக்கவும் வேண்டும்.

மாவட்ட மந்திரிகளை ஏற்பதா? இல்லையா? என்பது பற்றியும், தமிழர் விடுதலை கூட்டணியினர் இன்னும் முடிவு செய்யவில்லை. தமிழ் பகுதிகளின் அபிவிருத்தி கருதி மாவட்ட மந்திரி பதவிகளை தமிழர் விடுதலை கூட்டணியினர் ஏற்க வேண்டும் என்பதே பெரும்பாலான தமிழ் மக்களின் கருத்தாகும்.

குடியேற்றம், வேலைவாய்ப்பு பிரதேச அபிவிருத்தி, பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றிற்காக மாவட்ட மந்திரி பதவிகளை, தமிழர் விடுதலை கூட்டணியினர் ஏற்பது அவசியமாகும்.

க. சந்திரன்.
யாழ்ப்பாணம்.

## புதிய பஸ் சேவை

சுழிபுரம், வெள்ளி

காரைநகர் இ. போ. ச. டிப்போவினரால் சுழிபுரம் வடக்கு கண்ணகை அம்மன் கோயிலடியிலிருந்து புதிய பஸ்சேவை ஒன்று நாளை சனிக்கிழமை முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது. இச்சேவையை வட்டுக்கோட்டைத் தொகுதி தேசிய பேரவை உறுப்பினர் திரு. தா. திருநாவுக்கரசு காலை 7 மணிக்கு ஆரம்பித்துவைப்பார். இச்சேவை தினமும் சுழிபுரம் வடக்கு கண்ணகை அம்மன் கோவிலில் ஆரம்பிக்கப்பட்டு, பணிப்புலம், வடலியடைப்பு சித்தன்கேணி, சங்கானை மானிப்பாய் ஆகிய வீதிகள் வழியாக யாழ்ப்பாணம் சென்றடையும் இச்சேவை வட்டுக்கோட்டைத் தொகுதி தேசியப் பேரவை உறுப்பினர் திரு. தா. திருநாவுக்கரசுவின் துரித முயற்சியால் உடன் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

# மாமியார் கொலை:

## மருமகனுக்குப் பிடிவிறாந்து

யாழ்ப்பாணம், வெள்ளி

மாமியார் கொலைசெய்யப்பட்டதைத் தொடர்ந்து சந்தேகநபரான மருமகனுக்கு பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மயிலிட்டியைச் சேர்ந்த ராசா பெண் ரத்தினத்தின் மரணவிசாரணை நேற்று நடைபெற்றது. யாழ். மரணவிசாரணை அதிகாரி திரு எஸ். கனகரத்தினம் மரணவிசாரணை நடத்தினர்.

சம்பவதினம் வீட்டில் தாயாரும் தானும் இருந்தபோது சந்தேகநபரான கணவன். படலையில் நின்று பேசியதாகவும் அதன்பின் தாயாரின் தலையில் அடித்ததாகவும், அவர் விழுந்த பின்பும் அடித்ததாகவும் சாட்சியமளித்த கண்ணகை தேவி கூறினார்.

காயமடைந்தவர் தெல்லிப்பளை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கிருந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார்.

விசாரணையின்பின் கொலை எனத் திர்ப்பு அளிக்கப்பட்டது. (க)

## கலைஞர்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

இந்த அதிகாரிகளால் பலர் சித்திரவதைப்படுத்தப்பட்டனர்.

''தற்போது மத்திய சட்ட அமைச்சராக இருக்கிற ரேசாந்திபூஷன், சர்க்காரியா கமிஷன்முன் கருணாநிதிக்காக ஆஜர்செய்து, இவரது ஆலோசனையின்பேரால் கமிஷனை கருணாநிதி விசாரணையைப் புறக்கணித்தார்.

''கடந்த தேர்தலில் ஜெய்ப்பூர் கூட்டத்தில் ஜனதாக்கட்சியின் தலைவர் சந்திரசேகர் பேசும்போது ''நெருக்கடி நிலையை கருணாநிதி எதிர்க்கிறார் என்ற காரணத்திற்காக அவர்மீது பழிதூற்றி அரசியல் ரீதியாக வஞ்சம் தீர்ப்பதற்காக சர்க்காரியா கமிஷனை இந்திரா நியமித்தார்' என்று பேசினார். தேர்தல் நேரத்தில் இதே கருத்தை ஜெகஜீவன் ராம், சாந்திபூசன் ஆகியோர் இதே கருத்தை வெளியிட்டனர்''. இவ்வாறு ராஜிந்தர்பூரி தமது கட்டுரையில் கூறியுள்ளார். (கெ

## உரோமாபுரி பயணம்

அரியாலை, வெள்ளி

யாழ்ப்பாண மாவட்ட ஆயர் அதி வணக்கத்துக்குரிய தியோகுப்பிள்ளை ஆண்டகை ரோமில் நடைபெறவிருக்கும் ஆயர்களின் மகாநாட்டில் கலந்து கொள்வதற்காக ரோமுக்குப் பயணமாகியுள்ளார். இவர் நாடு திரும்பும்வரை வணக்கத்துக்குரிய பிதா மைக்கல் அடிகளார் யாழ். மறைவட்டத்திற்குப் பொறுப்பாக இருப்பார்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் இவன்கோசலில் மேலவீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30 ந் திகதியச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No. 49, Jaffna. Telegram Eelanaadu Telephone 389, Registerd as News paper in Sri lanka;